# புகை ஒரு பகை!

வாசிக்க: 1 கொரிந்தியர் 6:12-20

***"நீங்கள் கடவுளின் ஆலயமாய் இருக்கிறீர்களென்றும், தூயாவியானவர் உங்களில் தங்கியிருக்கிறாரென்றும் அறியாமல் இருக்கிறீர்களா? ஒருவன் கடவுளின் ஆலயத்தைக் கெடுத்தால் கடவுள் அவனைக் கெடுப்பார்" (1 கொரி 3:16,17)***

"புண்பட்ட மனதைப் புகைவிட்டு ஆற்றுகிறேன்," என்போர் சிலர். சுருள் சுருளாய்ப் புகைவிட்ட பலர் வாழ்நாளின் இறுதியில் சுருண்டு படுத்துக்கிடப்பது வாழ்க்கையின் வாடிக்கை...

இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் பீடி, சிகரெட் கிடையாது. ஆகவே வேதத்தில் புகைப்பழக்கத்தைப் பற்றி நேரிடையான போதனை இல்லை. எனினும் பொது அறிவின்படி பார்த்தாலும், எல்லா சிகரெட் பெட்டிகளிலும், இந்த வாசகம் உண்டு: Statutory warning: Smoking is injurious to health. இம்மாதத்தின் இறுதிநாள் அகிலவுலகிலும் "புகைப்பு எதிர்ப்பு நாள்" என அனுசரிக்கப்படுகிறது.

புகைத்தல் நம் ஆரோக்கியத்திற்குக் கேடு என்பது விஞ்ஞான ரீதியில் உலக முழுவதும் மருத்துவர்களால் நிரூபிக்கப்பட்ட உண்மை. தமிழகத்தில் பொது விடங்களில் புகைப்பது சட்டத்தின்படி குற்றம். வேதமும், "பிரியமானவனே, உன் ஆன்மா வாழ்வதுபோல் நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கவேண்டும்" (3 யோ 2) என விரும்புகிறது. எனவே புகைப்பது கடவுளின் விருப்பத்திற்கு மாறானது. ஆகவேதான் புகைப்போர் பலரது மனசாட்சியும் அவர்களுக்கு உறுத்து தலாய் உள்ளது.

கடவுள் நம் ஆன்மாவைத்தானே மீட்டு, தூய்மைப்படுத்துகிறார்; எனவே புகை பிடித்தல் நம் ஆன்மாவைக் கறைபடுத்துவதில்லை என்போர் சிலர். புகைப்பவர் களின் உதடு, பல், கண்களைப் பார்த்தால் அவை எவ்வளவு அலங்கோலமாய்க் காணப்படுகின்றன. கடவுள் நமக்குக் கொடுத்துள்ள கட்டளை என்ன? "உங்கள் உடல்கள் கடவுளின் உறுப்புகளென்று உங்களுக்குத் தெரியாதா? ஆகையால் கடவுளுக்கு உடையவைகளாகிய உங்கள் உடலினாலும் கடவுளுக்கு மாட்சிமை செலுத்துங்கள்" (1 கொரி 6:15).

புகைபிடிப்போர் பெரும்பாலும் ஒருவித அடிமைத்தனத்துக்குள்தான் இருப் பார்கள் (யோ 8:34). ஆனால் கடவுளின் பிள்ளைகளுக்குரிய உயரிய கோட்பாட்டை திருமறையில் இப்படி வாசிக்கிறோம்: "எல்லாவற்றையும் செய்ய எனக்கு உரிமை யுண்டு, ஆனாலும் எல்லாம் எனக்குத் தகுதியாய் இருக்காது; எல்லாவற்றையும் செய்ய எனக்கு உரிமையுண்டு, ஆனாலும் நான் எதற்கும் அடிமைப்படமாட்டேன்" (1 கொரி 6:12). தீதாய்த் தோன்றும் எல்லாவற்றையும் விட்டுவிலகுங்கள் என்றும் திருமறை போதிக்கிறது. புகை நமக்குப் பெரும் பகை!

பலர் இன்று இப்பழக்கத்திலிருந்து மீள முடியாமல் தவிக்கின்றனர். பிரச் னைக்குத் தீர்வு இதோ: "இயேசு உங்களை விடுதலையாக்கினால் உண்மையிலே நீங்கள் விடுதலையாவீர்கள்" (யோ 8:36). சோதிக்கப்படுகையில் மேற்குறிப்பிட்ட திருவசனங்களை நினைவுபடுத்தும்படி ஆவியானவரிடம் வேண்டுங்கள். புகைப் போரின் சகவாசத்தை விட்டுவிடுங்கள். பல் மருத்துவரிடம் சென்று பற்களிலுள்ள கறைகளை நீக்கிவிடுங்கள். Smile, Jesus loves you!

*தூயாதி தூயவரே, எங்களுக்கும் எங்களைச் சுற்றியிருப்போருக்கும்*
*தீமை விளைவிக்கும் எவ்விதப் பழக்கத்தையும்,*
*அது எங்களுக்கு எவ்வளவு பிரியமாயிருந்தாலும், விட்டுவிட சக்தி தாரும்!*